வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC

# தவணைப் பரீட்சை, யூன்- 2017
# Term Examination, June - 2017

| அரசியல் விஞ்ஞானம் | தரம் :- 13 | புள்ளித்திட்டம் |
|---|---|---|

**வினாப்பத்திரம் II**

**பகுதி - A**

1. 1) அரசு
   2) அரசியல் யாப்பு

2. 1) சமவுடமைவாதம்
   2) தராள வாதம்

3. 1) சார்ல்ஸ் ஈ.மெரியம்
   2) ஹரல்ட் லஸ்கி

4. 1) சிவில் சமுகம்
   2) அரசியல் நடத்தை

5. 1) பிளேட்டோ
   2) தோமஸ் வோ

6. 1) "அரசியல் அரிஸ்ரோட்டில்
   2) இளவரசன் / பிறினிஸ் - மாக்கியவல்லி

7. 1) பொது சன அபிப்பிராயம்
   2) அமுக்கக்குழு

8. 1) சமச்சீரான மோதம்
   2) சமச்சீரற்ற மோதல்

9. 1) சர்வதேச அரசசார்ப்பு / அரசாங்க சார்ப்பு நிறுவனங்கள்
   2) சர்வதேச அரசசார்பற்ற / அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள்

10. 1) தனியார் நிர்வாகம்
    2) பொதுத்துறை நிர்வாகம்

11. 1) பேசுவார்த்தை

    2) விஞ்ஞாபனம் / மறு கருத்து

12. 1) மசோதங்களுக்கு அங்கிகாரம் வழங்கி அவற்றை சட்டமாக்கல்.

    2) மசோதங்கள் மீதான இரத்து அதிகாரம்

13. 1) குறு மக்கலம்

    2) மனிங்

14. 1) இலங்கையின் வேண்டு கோளின் கீழ் இலங்கை தொடர்பான சட்டங்களை ஆக்குவதற்கு பிரித்தானிய பாராளுமன்றம் பெற்றிருந்த அதிகாரம்

    2) இலங்கை பாராளுமன்றம் நிறைவேற்றும் சில மசோதாக்கள் சட்டமாவதற்குப் பிரித்தானிய முடியின் அங்கிகாரத்தை நேரடியாக – பெற வேண்டும் என்றும் சில சட்டங்களுக்கு தேவைப்பட்டால் முடியின் பிரதிநிதியான மகா தேசாதிபதி அனுமதி வழங்க மறுக்கலாம்.

    3) யாப்பின் 29 II சரத்து இலங்கைப் பாராளுமன்றின் சட்டவாக்க அதிகாரத்தை கட்டுப்படுத்தியமை

15. அரச சேவை ஆலோசனைச் சபை

    அரச சேவை ஒழுங்காற்று சபை

16. 1) சரத்து 45 படி தேசிய அரசுப்பேரவை தனது அதிகாரத்தை துறக்கவே கையளிக்கவே முடியாது. சட்டவாக்க அதிகாரம் பெற்ற வேறு நிறுவனம் நிறுவவும் முடியாது.

    சரத்து 48 (i) படி தேசிய அரசுப் பேரவை இயற்றும் சட்டத்துக்கு எந்த ஒரு நீதியை நிர்வகிக்கும் நிறுவனங்கள் அதிகாரம் பெற்றிருக்கவில்லை.

17. 1) அரசியல் யாப்பின் மூலம் அதிகாரத்தினை பரவலாக்கல்

    2) பாராளுமன்ற சட்டங்கள் மூலம் அதிகாரத்தை ஒப்படைத்தல்.

18. 1) பாராளுமன்ற பேரவை – 05

    2) அரசியலமைப்பு பேரவை – 10

19. 1) (பாராளுமன்ற ஆணையாளர் / ஒம்புட்ஸ்மன் / குறைகோள் அதிகாரி

    2) ஜனநாயக சோசலிச அரசியல் யாப்பு / 1978 2ம் குடியரசு

20. நிரந்தர அங்கத்துவம் - 05

    2 வருடத்துக்கு தற்காலிக அங்கத்துவம் } 10

## பகுதி - B

1. அறிமுகம் (24 புள்ளிகள்)

- அரசியல் விஞ்ஞானமது ஆய்வு செய்யும் எந்த ஒரு கருப்பொருளாக இருந்தாலும் அது அரசு என்பதை மையமாக கொண்டே இடம்பெறும்.
- அரசு என்பது அரசறிவியலிற் முக்கியமான கருத்தியலாகும்.
- அரசானது நமது அனைவரினதும் வாழ்விலும் நேரடியாக மறைமுகமாக செல்வாக்கினை செலுத்துகின்றது.
- மனிதர்கள் அரசின் செயற்பட்டதை உட்பட்டே வாழ்கின்றன.
- சமூகஸ்தாபனங்கள் அத்தியாவசியமானதும் முக்கியமானதுமான அரசு தொடர்பில் காணப்படும் விசேடமான விடயம் கண்ணுக்குப் புலப்படாத எண்ணக்கரு எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கும் தோற்றப்பாடு.
- சட்ட ஒழுகி, அதர்வம், உரிமை என்பதை உறுதி படுத்துதல் அரசின் கடமை என ஏற்று கொள்ளப்பட்டுள்ளது. இதனால் அரசை விளங்கிக் கொள்ள பிரதான மூலக்கொள்கையாக இவை அமைகின்றன.
- அரசறிவியலில் பாடப்பரப்பு இயங்கு தன்மை பொருத்திய வகையில் காலத்தின் தேவைக்கேற்ப வளர்ச்சியடைந்து வருகின்ற போதிலும் அரசை மையப்படுத்தியே கற்கப்படுகின்றது.
- அரசறிவியல் ஒரு முறையான பாடம் என்ற வகையில் இயற்கைக்கு 2500 வருட காலத்துக்கு முற்பட்ட காலத்திலேயே கற்பதற்கான ஆரம்பம் இடம்பெறுகிறது. அக்காலத்திலிருந்து பிரதானமாக அரசைமையப்படுத்தியே கற்கப்பட்டது.
- நவீன காலத்தில் தேசிய அரசுகளின் தோற்றத்தோடு அரசின் அதிகாரத்தோடு மையப்படுத்தி கவனம் செலுத்தப்பட்டது.
- 17ம் நூற்றாண்டின் பின் பல புதிய விடயங்கள் அரசறிவியல் பாடப்பரப்புகளில் சேர்க்கப்பட்டது. இவை அனைத்தும் அரசு என்ற எண்ணக்கருவை மையப்படுத்தி கவனம் செலுத்தப்படுகிறது.
- பிரதிநிதித்துவ வளர்ச்சியுடன் அரசியல் கட்சி, தேர்தல் முறை பொதுசன அபிப்பிராயம் என்பனவும்.
- 1917 இல் மாக்சிச லெனிசத்தின் கருத்துக்களும் அரசு பற்றிய கற்கையுடன் இணைக்கப்பட்டன.
- 1980 தராளவாதத்தில் தலையிடாத அரசு, குறைந்த பட்ச அரசு, நலன்புரி அரசு பற்றிய கற்கையும் இடம் பெற்றது.
- அரசறிவியல் பாடப்பரப்பு சார்ந்த விதம் அரசினிருந்தே அன்று தொடக்கம் இன்று வரை உள்ளது. (20 புள்ளிகள்)

**முடிவுரை**

இவ் வினாவிற்கான விடை அரசை மையப்படுத்தி பாடப்பரப்பு வளர்ந்த விதத்திற் விளக்குதல் எதிர் பார்க்கப்படுகிறது. (2 புள்ளிகள்)

2. 1) அரசின் தோற்றம் வளர்ச்சி எதிர்காலம் பற்றிய அறிமுகம் (1 புள்ளி)

- சமூக படிமுறையூடாகவே அரசு தோற்றம் பெறல்
- இதன்படி சிதறிக்கிடந்த மனிதன் சில சமூகப் பண்புகளின் ஒன்றிணைந்து ஒரு பொது இடத்தில் நிலையாக குடிகொண்டு சமூகமாக ஒழுங்கமைப்பதே அரசின் தோற்றம்.

- உறவுத் தொடர்புகளின் அடிப்படையில் சமூகம் தோன்றி படிமுறையாக வளர்ச்சியடைந்து அரசு தோன்றியது.

**அரசின் வளர்ச்சி**

அரசின் வளர்ச்சி படிமுறை வளர்ச்சியின் விளைவாகும். குலமரபு அரசு கீழைத்தேய அரசு, கிரேக்க நகர அரசு என பல சட்டம் தாண்டி தேசிய அரச முறையாக வளர்ச்சியடைந்தமை. தலையிடா அரசு, நலன்புரி அரசு, தற்போது குறைந்த பட்ச அரசாக வளர்ச்சியடைந்தமை. (8 புள்ளிகள்)

**அரசின் எதிர்காலம்**

இவர்கள் மனிதனின் சமூக இருப்பு வளர அரசு இல்லாதொழியாது, சமூகத்தின் பொது நன்மையை நிறைவு செய்ய அரசு அவசியமானது அரசு சமூகத்தின் தேவையை பொருட்டு மாற்றமுற்று வளர்ச்சியடையும்.

முடிவுரை (01 புள்ளி)

2) அரசு பற்றிய பாக்கிசவாதம் பற்றிய அறிமுகம் (01 புள்ளி)

- அரசுவர்க்க நலனை பேண உருவாக்கப்பட்டது. இதற்கு அடிப்படைக்காரணி சொத்து சொத்தை மையப்படுத்தி இருவேறுபட்ட வர்க்கம் உருவாகியது. அதனடிப்படையில் செல்வந்த வர்க்க நலனை பாதுகாக்க உருவாகியது. அந்த சொத்தற்ற வற்க்கம் கிளர்ந்தெழும் போது அதனை அடக்கும் கருவியே அரசாகும் எனவும் மாக்சிசவாத கருத்துப்படி அரசு படிமுறையாக சோசலிச அதிகால கம்பூசை சமுதாயத்திலிருந்து இறுதி சோசலிச அரசுவரை வர்க்க நலன் பேணும் கருவியாக செயற்படும் எனப்படுகிறது.

மாக்சிச கருத்துக்களின்படி அரசு நிரந்தர மற்றது. வர்க்கங்கள் அழியும் போது அரசும் பட்டொழிந்துவரும். இதற்கு சோசலிச புரட்சி முன்வைக்கப்படுகிறது. இதன் மூலம் தூய கம்யூனிச சமுதாயம் உருவாகும். என்ற அடிப்படையில் விளக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது.

முடிவுரை (01 புள்ளி)

3. அரசாங்கத்தின் அதிகாரம் கோட்பாடு ரீதியாக அரசுக்கோ உரியது. இது நிலையான, எல்லையற்ற ஒருமையானது இவ் அரசின் அதிகாரமான இறையை அரசின் சார்பாக அரசாங்கம் செயற்படுத்துகின்றது. அறிமுகம். (01 புள்ளி)

இறைமை அதிகாரத்தின் உரிமையாளனாக அரசாங்கம் செயற்படுவதோடு உள்வாரி வெளிவாரி அதிகாரத்தை பிரயோகிக்கின்றது. இவ் அதிகாரத்தை பயன்படுத்தி அரசின் ஆட்புல் எல்லைக்குள் சட்டங்களைப் பிறப்பித்து நடைமுறைப்படுத்தாது பிரயோகிக்கும் வழிமுறை.

(இறைமைய பயன்படுத்தல் விளக்கம்)

கட்டுப்படுத்தும் வழிமுறைகளாக முறைசார் கட்டுப்பாடு
முறைசார் கட்டுப்பாடு

**முறைசார் கட்டுப்பாடு**

அரசியல்யாப்பு, வலுவேறாக்கம், நீதிபுணராய்வு அதிகம்

**முறைசார கட்டுபாடு.**

கதிர்கட்சி, ஊடகம், சிவில் சமூகம் இவை பற்றிய விளக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. (08 புள்ளிகள்)

முடிவுரை (01 புள்ளி)

4. உலகில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தோற்றத்துடன் அதனை நடைமுறைப்படுத்தும் ஒரு வழிமுறையே விகிதாசார பிரதிநிதித்துவ முறையாகும். தேர்தலில் போட்டியிட்ட சக அரசியல் கட்சிகளும், பெற்ற வாக்கு வீதத்துக்கு ஏற்ப ஆசனங்களை பெற்றுக் கொள்ளும் முறையே அறிமுகம். (01 புள்ளி)

**நன்மைகள்**

- ஜனநாயகத்தன்மை வாய்ந்தது
- சகல பலம் வாய்ந்த அபிப்பிராயங்களுக்கும் பிரதி நிதித்துவத்தை பெற்றுகொடுக்கின்றது.
- பல்லின சமூக முறையில் பெரும்பான்மை இளம் மட்டுமன்றி சிறுபான்மை இளங்களும் நியாயமான பிரதிநிதித்துவத்தை பெற்று கொடுக்கிறது.
- வாக்குகள் வீண் விரயமாவதில்லை
- வாக்காளர்களின் விருப்பு பரந்ததாகக் காணப்படல்.
- அதிக பிரதிநிதித்துவமோ குறை பிரதிநிதித்துவமோ ஏற்படுவதில்லை.
- பிரதான அரசியற் கட்சிகளின் குறைதல் பிரதிகளுக்கும் வாக்காளரும் தொடர்பு குறைவதால் பிரதிநிதி வாக்காளர் செல்வாக்குக்கு உட்படாதிருத்தலும், மற்றும்இலஞ்சம், ஊழல் குறையவும் வாய்ப்பு உண்டு.
- இடைத்தேர்தல் நடைபெறாமல் இருத்தலாகக் காலமும் பணமும் மீதப்படும். (04 புள்ளி)

**குறைபாடுகள்**

- பலகட்சி வளர்ச்சியடைய காரணமாக அமைதல்
- கூட்டரங்கம் உருவாதல் பலவீன அரசாங்கமாக இருத்தல்.
- அரசியல் கட்சிகளின் தலைமைத்துவத்தின் ஆதிக்கம் வளர்ச்சியுறல்.
- வாக்காளருக்கும் பிரதிநிதிகளுக்கும் சேமையான தொடர்பு இதனால் பிரதிநிதிகள் பொறுப்பு கூறுவதில் இருந்து தவறுதல்.
- உறுப்பினர் தெரிவு கணிக்கப்படும் முறை கணிவு ரீதியாக அமைவதால் பாமரமக்களால் விளங்கிக் கொள்ள முடியாமை.
- நிராகரிக்கும் வாக்கு அதிகமாக காணப்படல்
- வெட்டுப்புள்ளி, போணஸ் ஆசனம் என்பவற்றால் ஜனநாயகத்தன்மைக்கு பங்கம் ஏற்படல்.
- இடைத்தேர்தல் நடைபெறாததால் பொதுசன அபிப்பிராயத்தை அறியமுடியாமை.
- குறைந்த அரசியல் அறிவு, பலவீன அரசியல் கலாச்சாரம் சமுதாயத்துக்கு சிறப்பாக இயங்க முடியாமை.

முடிவுரை (01 புள்ளி)

3) 1. ஒழுங்கமைத்த சமூகத்தில் மனிதன் வெளிப்படுத்தும் அரசியல் நடத்தைக் கோலமாகும் என்றவையில் அறிமுகம். (01 புள்ளி)

சமூகத்தில் வாழும் மனிதர்களின் மனப்பாங்குகள் உணர்வு ஈடுபாடுகள் விழுமியங்கள் போன்ற சமூகப்பெறுமானங்களின் வெளிப்பாடு கலாசாரம் பற்றிய விளக்கம் எதிர்பார்க்கப்படுகிறது.

- அரசியல், கலாசாரத்தை தீர்மானிக்கும் காரணிகள்
- அரசியல் முறைகள் பற்றிய புரிந்துணர்வும் ஈடுபாடும்
- அரசியல் சின்னம் பற்றிய புரிந்துணர்வும் ஈடுபாடும்
- விமர்சன ரீதியான புரிந்துணர்வு. *(08 புள்ளி)*

- **அரசியல் கலாசாரம்**

  பின்தங்கிய அரசியல் கலாசாரம் குறைவிருத்தி அரசியல் கலாசாரம் வளர்ச்சியடைந்த அரசியல் கலாசாரம் என்பவன விளக்கமாக வளங்கல் எதிர்பார்க்கப்படுகிறது.

*(01 புள்ளி)*

2. மக்களை தாம் வாழும் அரசியல் முறையுடன் இயைபாக்கம் செய்வதற்கான அறிவையும் விளக்கத்தையும் வழங்கி மக்கள் அரசியல் பண்பு மனப்பாங்கு நம்பிக்கை மதிப்பீடுகளை வெளியிடுவதில் செல்வாக்கு செலுத்தும் மொத்த செயலொழுங்கு அறிமுகம். *(01 புள்ளி)*

மனித அரசியல் கலாசாரத்தை முன்னெடுக்கப்படும் பழக்கப்படும் செயல்முறை மனிதனது எண்ணங்கள் நடத்தைகள் ஒழுங்குபடுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் பல்வேறு வகையான அரசியல் படிப்பினைகளும் இதில் அடங்கும்.

இவ் சமுதாயப்படுத்தலின் முகவர்களாக, குடும்பம், கல்வி நிறுவனம், சமய அமைப்புக்கள், ஊடகங்கள், தொழிற்சங்கங்கள், சமூக கலாச்சார அமைப்புக்கள், அரசியல் குறியீடுகள், அரசியல் கட்சிகள், அரசாங்கம், சமூக வலைத்தளங்கள் குறிப்பிடலாம்.

- அரசியல் சமுதாயப்படுத்தலின் அளவை வெளிப்படுத்தும் காரணிகளாக.
- மக்கள் அரசியல் பங்கேற்பு உயர் மட்டத்தில் காணப்படல்
- அரசியல் தகவல்களைச் சேகரித்தல் தொடர்பான ஆர்வம்.
- அரசியல் கலந்துரையாடல்களில் பங்கு ஏற்கும் அளவு.
- உயர்மட்ட அரசியல் அறிவு *(8 புள்ளி)*

அரசியல் சமுதாயப்படுத்தலின் விளைவு.

- தேசிய அரசியல் முறைமைக்கு மக்கள் பழக்கப்படல்
- அரசியல் பதவிக்கு பொருத்தபாடுடையவராக்கல், ஒன்றினைந்த அரசியல் கலாசாரத்தை முன்னெடுத்தல்.
- அரசியல் செயற்பாட்டுக்கு முகம்கொடுக்க மக்களை தயார் படுத்தல்.
- மக்களின் தர்க்கித்தல் நியாயித்தல் என்பன தொடர்பிலான அறிவுரை பெற வகை செய்தல்.

முடிவுரை *(01 புள்ளி)*

3. மனித உரிமை அறிமுகம்

சமுகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதர்களின் நியாயமான கோரிக்கையே உரிமைகளாகும்.

*(01 புள்ளி)*

- "சகல மனிதரும் சுதந்திரமாக பிறந்துள்ளனர். அவர்கள் கௌரவம் மற்றும் உரிமைகளில் சமமானவர்களாவர்." இதன் படி கௌரவமான சமூக வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கும் தனியாட் தன்மையினைப் பரிபூரணமாக விருத்தி செய்வதற்க்கும் சமூக நியாயத்தை சமமான முறையில் பெற்று கொள்வதற்கும் சகல மனிதருக்கும் சமமான வகையில் கிடைக்க வேண்டிய உரித்துக்களே உரிமைகளாகும்.
- உரிமைகளைப் பாதுகாக்கும் வழிமுறைகள் சட்டமற்று நிறுவன வழிமுறை
- அரசியல் யாப்பில் உரிமைகளை உறுதிப்படுத்தல்
- ஒம்புட்சுமன் பதவி நியமிக்கப்படுதல்
- நீதித்துறையின் பணிகள், சட்டகட்சி, மனித உரிமை ஆணைக்குழு தாபித்தல், வலுவேறாக்கம்.

**அரசியல் வழிமுறை**

- சுதந்திரமான ஊடகம் (8 புள்ளி)
- அமுக்க குழுக்களின் செயற்பாடுகள்
- மக்களின் விழிப்பு நிலை

முடிவுரை (01 புள்ளி)

4. அரசாங்கம் சர்வதிகாரமாக மாறுவதை தடுப்பதற்கும் மனித சுதந்திரத்தை பாதுகாப்பதற்கும் அரசாங்கத்தின் அதிகாரத்தை வரையறைகளுகுட்படுத்த வேண்டும். இதனடிப்படையில் அரசாங்கத்தின் அதிகாரத்தை கட்டுப்படுத்தும் சிறந்த வழிமுறையே வலுவேறாக்கம் அறிமுகம்.

(01 புள்ளி)

- வலுவேறாக்கம் பற்றி மொண்டஸ்கியூ குறிப்பிட்டு உள்ளவிடயம்
- அரசாங்கத்தின் அதிகாரம் ஏன் பிரிக்கப்பட வேண்டும்.
- பொருள் விளக்கம்
  நடைமுறையும் தற்கால நிலையும்
- வலுவேறாக்க நன்மைகள்
  தன்னிச்சையான அரசாங்கம் தோன்றுவதை தடுத்தல்
- முழுமையாக அதிகாரத்தை பிரிக்கமுடியாது சமநிலை தலையீடு காணப்படுதல்.
- அரசாங்கத்தின் சர்வதிகாரத்தை தடுப்பதன் மூலம் மனித சுதந்திரத்தை பாதுகாக்கலாம்.
- நல்லாட்சியையும் ஜனநாயக ஆட்சியையும் பலப்படுத்த முடிதல்.
- சட்ட நிர்வாக துறை தலையீடு இந்த நீதித்துறையினை சுதந்திரமாக தாபனமாக வைத்துக் கொள்ள முடிதல். (08 புள்ளி)

**குறைபாடுகள்**

- முத்துரைகளுக்குமிடையே அதிகாரம் சமமாக பிரிக்க முடியாது.
- எல்லையற்ற தாபனங்களின் சுதந்திரம் ஏற்பட்டு அவற்றுக்கிடையில் மோதல் ஏற்படவாயிற்று.
- மனித சுதந்திரத்திரத்துக்கு வலுவேறாக்கம் மட்டும் போதுமானதன்று.

- வலுவேறாக்கம் பற்றி மாவுல் என்பன குறிப்பிடும் குறைபாடுகள் இவ் வினாவிற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

முடிவுரை (01 புள்ளி)

1) 5ஆம் குடியரசு யாப்பின் படி அரசினதும் அரசாங்கத்தினதும், ஆயுதம் தாங்கிய படைகளின் தலைவர். அந்த வகையில் பிரான்சின் ஜனாதிபதி முக்கியமானவர். அறிமுகம். (1 புள்ளி)

- அரசின் தலைவர் என்ற வகையில்
- அரசாங்கத்தின் தலைவர் என்ற வகையில்
- நிறைவேற்றுத்துறையின் தலைவர்
- ஆயுதம் தாங்கிய படைகளின் தலைவர் என்ற வகையில்
- அரசியல் யாப்பு வழங்கியுள்ள அதிகாரங்கள்
- அவசர கால அதிகாரம்
- மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு நடத்தும் அதிகாரம்
- வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பான அதிகாரம் போன்ற அதிகாரங்களை விரிவாக விளக்கல் எதிர்பார்க்கப்படுகிறது. (8 புள்ளி)

பிரான்சின் ஜனாதிபதியின் தற்கால நிலையுடன் தொடர்புபடுத்தி முடிவுரை. (1 புள்ளி)

2) சமஷ்டி பேரவை என அழைக்கப்படும் கூட்டு நிறைவேற்றுத்துறை ஏழு உறுப்பினர்களை கொண்டது. கூட்டு பிரதானியே அதன் தலைவர். அறிமுகம் (1 புள்ளி)

சமஷ்டி பேரவைக்கு 18 வயதுக்கு மேற்பட்ட வாக்குரிமை பெற்ற எந்தவொரு சுவிஸ் பிரஜையும் பேரவை தெரிவு செய்ய தகுதிபடைத்தவர்.

- சமஷ்டி பேரவையின் பதவிக்காலம் 4 வருடங்கள் அப்பதவிக்கு எஞ்சிய கால வெற்றிடம் ஏற்பட்டாத சமஷ்டி மன்றினால் புதிய ஒருவர் நியமிக்கப்படுவார்.
- தெரிவு முறை
  சமஷ்டி மன்றின் இரு அலைகளின் கூட்டாளரின் மூலம் தெரிவு செய்யப்படல்.
- சமஷ்டி பேரலையின் அரசியல் கட்சிபிரதிநிதித்துவம்.
  பிரதான 4 கட்சிகளும் சமஷ்டி மன்றில் பெற்ற ஆசன விகிதத்திற்கு ஏற்ப பிரதிநிதித்துவம் வழங்கப்படும்.
- சமஷ்டி நிறைவேற்று துறையின் ஏழு உறுப்பினர்களில் இருந்து தலைவரும் துணை தலைவரும்தெரிவு செய்யப்படுவர். சூழற்சி முறையில் அது அமையும்.
- ஏழு இலாகாக்கள் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதில் இவர்கள் ஒவ்வொருவரும் ஏழு இலாகாக்களை பிரதானிகளாவர்.
- சட்டத்தூர, நிறைவேற்றுதூர, வெளிநாட்டு உறவுகள், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான தொடர்பு பேணல்.
- சமஸ்டி பேவையின் விசேட பண்பு.

3) USA ஜனாதிபதியின் மூன்று மூலாதாரங்கள் ஊடாக பெறுகின்றார். இவர் உண்மை நிர்வாகியும் நாம நிர்வாகியுமாவர். அறிமுகம். (1 புள்ளி)

முக்கிய அமெரிக்க ஜனாதிபதி

- யாப்பின் மூலம்
- ஒப்படைப்பதன் கீழ் உரித்தானவை
- நீதிமன்றத் தீர்ப்பின் மூலம்

யாப்பில் மூலம் 2 வது அத்தியாயத்தின் 2,3ம் சரத்தின்படியும் மூன்று வகையில் அதிகாரங்களைப் பெற்றுள்ளார்.

- அரசின் தலைவர் என்ற வகையில்
  - தேசிய கிறிஸ்மஸ் மரத்தை ஒளிசெய்தல்
  - தேசிய வீரர்களின் பதக்கம் வழங்கல்
  - மத்திய மாநில குடியரசை பாதுகாத்தல்
  - USA சொத்துக்களை பாதுகாத்தல்
  - தேசிய முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள் வெளியிடல்

- முப்பட தலைவர் என்ற வகையில்
  - முப்படைகளினதும் தளபதியாக செயற்படுதல் முப்படைகளின் அதிகாரிகள் மட்டத்திலான சகல நியமனங்கள் மேற்கொள்ளல்.
  - USA விமானங்கள் தரித்து நிற்பதற்கான இடங்களை தீர்தானித்தல்.
  - போர் முப்பட பாதுகாப்பு சேவை அமைத்தல்.

- பிரதான தாள நிறைவேற்று அதிகாரி என்ற வகையில்
  - நிறைவேற்று கட்டளைகாக பிறப்பித்தல்
  - அரச கொள்கை தீர்மானித்தல்
  - சமஷ்டி நிர்வாகத்தை கொண்டு நடத்துதல்
  - வரவு செலவை கட்டுப்படுத்தல்
  - குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல்

- காங்கிரஸ் தொடர்பாக
  - காங்கிரசுக்கு செய்திகள் அனுப்புதல்
  - சட்டவாக்க கொள்கையை சிபார்சு செய்தல்
  - காங்கிரசிற்கு விசேட சட்டங்களை கூட்டுதல்.
  - சட்டத்துக்கு இறுதி அங்கிகாரம் வழங்கல்.

- வெளிநாடு கொள்கை தீர்மானத்தில் 3 உம் முறை எடுத்தல்.
- வெளிநாட்டு அலுவலர் வரவேற்றல் கலந்துரையாடல்
- வெளிநாட்டு வர்த்தகத்தை கட்டுப்படுத்தல்
- மேலும் பல நியமங்களை மேற்கொள்ளல்.
- உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு அமைவாக பதவி நீக்கல்கள் மேற்கொள்ளல். *(08 புள்ளிகள்)*

இன்றைய ஜனாதிபதியின் நிலையினை அடிப்படையாக வைத்து முடிவுரை அமைத்தல்

*(01 புள்ளி)*

4) இந்திய சமஷ்டி பற்றிய அறிமுகம் (01 புள்ளி)
அதன் மூலக் கொள்கையை

- எழுதப்பட்ட அரசியல் யாப்பு
- நெகிழா யாப்பு
- அரசியலமைப்பின் உயர்தன்மை
- மத்திய மாநில அரசுகளுக்கிடையில் அதிகாரம் பகிரப்பட்டிருத்தல்
- அரசியலமைப்பின் பாதுகாவலன் என்ற வகையில் சுதந்திர நீதித்துறை
- மத்திய அரசில் மாநில அரசை பிரதிநிதித்துவபடுத்தும் இரண்டாம் மன்றம். (08 புள்ளிகள்)

இந்தியா ஒரு அரைகுறை / பாதி சமஷ்டி என்ற வகையில் விமர்சன ரீதியான முடிவுரை
(01 புள்ள)

5) ஓர் அரசுக்குள்ளே நடைபெறும் அரசியலே தேசிய அரசியலாகும். சர்வதேச அரசியல் என்பது தேசங்களிடையே நடைபெறும் அரசியலாகும் என வரைவிலக்கணப்படுத்தல் எதிர்பார்க்கப்படுகிறது. அறிமுகம் (1 புள்ளி)

- சர்வதேச சமூகத்தில் ஓர் அரசாங்கத்தின் ஆட்சி இல்லாத அரசியலே நிலவுகிறது.
- தேசிய நலனை பாதுகாத்தல் தேசிய கருத்தியலை பாதுகாத்தல் தேசிய பொதுநலனை மேம்படுத்தல் போன்றவை ஒவ்வொரு தேசிய அரசினதும் தனிப்பட்ட பொறுப்பாக இருப்பதோடு இன அடைய சர்வதேச அரசாங்கம் காணப்படுவதில்லை.
- தமது நலன்களையும் தேவைகளையும், நோக்கங்களையும் தாமே நிறைவேற்றி கொள்ள நிபந்தனையின் அடிப்படையில் செயற்படும் அரசு முறையே சர்வதேச சமூகத்தில் காணப்படுகிறது.
- சர்வதேச அரசு தேசிய அரசைவிட முற்றிலும் வேறுபட்டதாகும். (08 புள்ளி)

தேசிய அரசியலிலும் அதிகாரப் போட்டியை அடிப்படையாக கொண்டு செயற்பட்டாலும் அதிகார போராட்டத்தில் ஈடுபடும் செயற்பாட்டாளர்கள்.

- அரசாங்கம்
- ஒழுக்கம் ஆகியவை கட்டுப்படுத்துகிறது.
- சர்வதேச அரசு ஓர் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுகோ சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்கத்துக்கு கீழ்ப்பட்டதோ அன்று
- ஆனால் மோதலை தீர்க்கும் பிரதான வழிமுறையாக யுத்தம் கைக்கொள்ளப்படுகின்றது.

முடிவுரை (01 புள்ளி)

## பகுதி - C

5. பிரித்தானிய குடியேற்ற நாட்டாட்சியினது அரசியல் சமூக விடுதலையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இலங்கையில் தோற்றம் பெற்ற பல்வேறு சமூக இயக்கங்களில் முக்கியமானதாகும். தேசிய ஐக்கிய மற்றும் இன சௌஜன்யத்தினை பிரதிபலித்து நின்று 1919 டிசம்பர் 11 இல் உருவாக்கப்பட்டது. அறிமுகம். (02 புள்ளிகள்)

- தேசிய காங்கிரஸ் ஸ்தாபிக்கப்படல்
- அதன் நோக்கம்
- தலைமைத்துவத்தின் இயல்பு விளக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. (08 புள்ளிகள்)

- வகிபாகம்
  கருவியாக செயற்படல்
  அரங்கமாக செயற்படல்
  செயற்பாட்டாளராக செயற்படல் (10 புள்ளிகள்)
- தேசிய காங்கிரசின் பிளவு
- தேசிய காங்கிரஸ் ஏற்பட்ட விளைவுகளை மதிப்பீடு செய்தல். (02 புள்ளிகள்)

6. 1931க்கு முன்பு தேசாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த குறிப்பிடத்தக்கனவு அதிகாரங்கள் டொனமூர் யாப்பின் கீழ் குறைக்கப்பட்டாலும் தேசாதிபதியே டொனமூர் அரசாங்க முறையில் முக்கிய நபராகத் திகழ்ந்தார். அறிமுகம் (01 புள்ளி)

1)

- அரசாங்க சேவையோடு தொடர்பான அதிகாரங்கள்
- நிறைவேற்று அதிகாரங்கள்
- விசேட நிலைகளில் சட்டவாக்கம் செய்யும் அதிகாரங்களும் உறுதிபடுத்தும் அதிகாரங்கள்
- அவசரகால நிலைகளில் விசேட அதிகாரம்
- சட்டத்துறையோடு தொடர்பான அதிகாரங்கள் போன்றவற்றை விளக்கமாக எழுதபட வேண்டும்.

முடிவுரை (01 புள்ளி)

2) இலங்கை அரசியல் யாப்புகளில் சோல்பரி அரசியல் யாப்பில் சிறுபான்மையினரின் காப்பேடுகள் உருவாக்கப்பட்டுள்ளது. இது ஜனநாய கட்சி தொடர்பாக அளவு பின்வருமாறு அறிமுகம். (01 புள்ளி)

**அரசியல்**

- யாப்பின் 29 II சரத்து
- செனற்சபை, கோமரைக்கழகம்
- பல அங்கத்தவர் தொகுதி , மகாதேசாதிபதி அதிகாரம் (08 புள்ளி)
- ஆறு நியமன அங்கத்தவர் முறை
- நீதிச்சேவை பொதுச்சேவை ஆணைக்குழு

விளக்கம் எதிர்பார்க்கபடுகிறது.

முடிவுரை (01 புள்ளி)

3) 1972 முதலாம் குடியரசு அரசியல் யாப்பு சோல்பரி அரசியல் யாப்பில் இருந்து வேறுபட்டு பல புதிய அம்சங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. (01 புள்ளி)

The National e-learning Portal for The General Education

மேலும் புதிய அம்சங்களாக

- குடியரசு முறை அறிமுகமானது
- தேசிய அரசுப் பேரவை மக்கள் இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய மீயுயர் நிறுவனமாக இருத்தல்.
- ஒற்றையாட்சி அரசாக பிரகடனம் செய்யப்பட்டமை.
- அரசுக்கும் சமயத்துக்கும் இடயிலான தொடர்பு யாப்பு தளம் வழங்கப்பட்டது.
- சிங்கள மொழி அரச கரும மொழியாக யாப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டன.
- பிரதமரால் நியமிக்கப்படும் நாம நிர்வாகி என்ற வகையில் ஜனாதிபதவி ஒன்று தாபிக்கப்படல்.
- சட்டமன்ற சட்டங்கள் அன்றி சட்ட மசோதாக்களை பரிசீலனை செய்வதற்கான அரசியலற்ற நீதிமன்றம் போன்விடயங்கள் சுருக்க விளக்கத்துடன் வழங்கல்.

(08 புள்ளி)

- இப்புதிய அம்சங்களால் ஏற்பட்ட விளைவுகள் பற்றி விமர்சன ரீதியான கருத்து முடுடிவுரை. (01 புள்ளி)

4) சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் தொடர்ந்து பிரித்தானிய முடிவுக்குரிய அரசாக இருந்தமையால் அதில் இருந்து விடுபடும் நோக்கோடு புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தெடர்பிலும் இலங்கையர்களிடையே ஏற்பட்ட மாற்றம் தொடர்பான அறிமுகம். (01 புள்ளி)

- இலங்கை தொடர்பில் சட்டவாக்கம் தொடர்பாக இலங்கையின் வேண்டு கோளின் பேரில் பிரித்தானிய பாராளுமன்றம் பெற்றிருந்தமை.
- மகா தேசாதிபதியின் இறுதி ஒப்பமிடல்
- பிரித்தானிய மரபுரிமை பேணல்
- நிறைவேற்று விடயம் தொடர்ந்து பிரித்தானியாவிடம் இருந்தமை.
- சட்டசபை உறுப்பினர்கள் மகாராணிக்கு சத்திய பிரமாணம் செய்தமை
- யாப்பின் 29 II சரத்துக்கு கட்டுபட வேண்டியிருந்தமை போன்ற பிரித்தானிய அரசுக்குரிய நாடாக இருந்தமை.
- இலங்கை ஒரு குடியரசாக வேண்டும் என்பது தொடர்பில்
- இலங்கையின் தலைவராக இலங்கையர் ஒருவர் இருக்க வேண்டும்.
- பிரித்தானிய மரபுரிமை அகற்றபட வேண்டும்.
- கோமரைக்கழக நீதிமன்றத்தின் அதிகாரம் அகற்றப்பட வேண்டும்.
- அரசசேவை ஆணைக்குழு மற்றும் நீதி பேணல் ஆணைக்குழு தொடர்பான முரண்பாடுகள்
- பண்டார நாயக்காவினதும், 1965 UNP கட்சியில் முயற்சியும் கைகூடாது பின்னர் 1970 தேர்தலில் வெற்றிபெற்ற SLIP அரசாங்கத்தால் 1972.05.02 பின்வருமாறு (08 புள்ளி)
  இதன் அம்சங்கள் நீக்கம் தொடர்பான விளக்கம் முடிவுரை. அறிமுகம் (01 புள்ளி)

7. இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் ஜனநாயக சோசலிச குடியரசு யாப்பின், 2016 ஆம் ஆண்டின் 12 இலக்க தகவலுக்கான உரிமைச்சட்டம் இலங்கையில் ஆசிய நாடுகளில் மூன்றாவது நாடாக கொண்டுவரப்பட்டுள்ளது இது 2017.02.03 திகதி நடைமுறைக்கு வந்துள்ளது. (01 புள்ளி)

இது 2016 ஒகஸ்ட் 05 திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தகமானி பத்திரிகையின் II ஆம் பகுதிக்கு வெளியிடப்பட்டுள்ளது. (08 புள்ளி)

- இது சட்டமானது தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமைக்கு ஏற்பாடு செய்வதற்க்கும், அணுக்கம் மறுக்கப்பட கூடிய ஏதுக்களை குறித்துரைப்பதற்கும் தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவினை தாபிப்பதற்கும், தகவல் அலுவலர்களின் நியமனத்திற்கும், தகவலைப் பெறுவதற்கான நடவடிக்கை முறைகளைத் தருவதற்க்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் நேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டமாகும்.
- அரசியலமைப்பின் 14 ஆம் உறுப்புரையில் தகவலைப் பெற அணுகுதலுக்கான உரிமையை உத்தரவாதம் செய்வதுடன் தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமைக்கு பயன்கொடுப்பதன் மூலம் பகிரங்க அதிகாரசபைகளின் வெளிப்படதன்மை மற்றும் பொறுப்புகூறும் தன்மை மாறும் நல்லாட்சியை மேம்படுத்தும் உதவியாக அமைகிறது.
- இலங்கைப்பிரசை என்ற அரச நிறுவனங்கள், மாகாணசபை உள்ளுராட்சி அமைப்புக்கள் அரச அங்கிகாரத்துடன் செயற்படும் நிறுவனங்களில் தம் பற்றிய தகவலை பெற உரிமை உண்டு அது தொடர்பாக விவரமாக 14 நாட்களுள் அந்தகவலை வழங்க வேண்டும். தகவல் மனுக்கும் பட்சத்தில் கூட நடவடிக்கைக்கு பற்றியும் வழங்கப்பட்டுள்ளது. உத்யோகத்தரின் அசமந்த போக்குக்கு சவாலாக இருக்கும் என்ற விமர்சன ரீதியான முடிவுரை. (01 புள்ளி)

2) 1978 யாப்பின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும் 19ம் திருத்தத்தின் மூலம் குறைக்கப்படுகின்றது என்ற வகையிலான அறிமுகம். (01 புள்ளி)

- ஜனாதிபதி அமைச்சரவையின் தலைவரும், அங்கத்தவராயினும் அமைச்சர்க்கான நியமிப்பதில் பிரதமர் கருத்தினை அறிந்த பின்னரே மேற்கொள்ள வேண்டும்.
- அமைச்சுக்களின் எண்ணிக்கை யாப்பு ரீதியாக வரையறுக்கப்பட்டுள்ளது. 30 விடகூடாது என வகுத்துள்ளதால் ஜனாதிபதி தற்துணிவில் செயற்பட முடியாது.
- ஜனாதிபதி 30 உறுப்புரிமையின் பிரகாரம் அரசின் தலைவர் அரசாங்கத்தின் தலைவர் முப்படையின் தலைவருமாவார்.
  பதவிக்காலம் 5 வருடம் - தடவை இரண்டு தடவை ஜனாதிபதி வேட்பாளருக்குரிய வயதெல்லை 35 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- ஜனாதிபதிக்கு 33 I பிரகாரம் பணிகள் வழங்கப்பட்டுள்ளது.
- அரசியல் யாப்ப மதித்து போற்றுதலை உறுதிப்படுத்தல்
- தேசிய நல்லினக்கத்தையும் ஒருமைபாட்டையும் மேம்படுத்தல்.

- அரசியலமைப்பு பேரவை VII அத்தியாயத்தில் புதிய பணிவழங்கப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்ட நிறுவனங்களினது முறையான செயற்பாட்டுடை உறுதிப்படுத்த வசதியளித்தல்.
- தேர்தலை சுயாதீனமாக நடத்த உதவுதல்.
- 3 மாதத்துக்கு ஒரு தடைவ பாராளுமன்றம் சமூகமளித்தல்
- பிரதமநீதியரசன், உயர்நீதிமன்ற நீதியரசர், மேல்முறையீட்டு நீதிமன்ற தலைவர் அதன் ஏனைய உறுப்பினர்களை, மேலும் சட்டமா அதிபர்களை ஏனைய உறுப்பினர்களை நியமிக்கும் போது அரசியலமைப்புபேரவையின் அங்கிகாரம் தேவை.
- ஜனாதிபதி பிரதமரை தற்துணிவின் பேரில் பதவி விலக்க முடியும் என்ற நிலை மாறி 46 (2) பிரகாரம் அவ்வாறு செய்யமுடியாது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (08 புள்ளிகள்)
- தேர்தல் நடைபெற்று 4 ½ வருடத்துக்கு ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்க முடியாது.
- பாராளுமன்றம் நிராகரித்த ஒரு சட்ட மூலற்ற ஜகாதிபதி மக்கள் தீர்ப்பு வரும் அதிகாரம் நீக்கப்பட்டுள்ளது.
- ஜனாதிபதிக் கெதிராக 120 உறுப்புரிமைக்கமைய அடிப்படை உரிமை வழக்கொள்ள தாக்கல் செய்ய முடியும்.

என்றவாறு ஜனாதிபதியின் அதிகாரத்தை விளக்கி முற்றாக ஒழிக்கப்படவில்லை. குறைக்கப்படாது என முடிவும் அமைபட எதிர்பார்க்கப்படுகிறது. (01 புள்ளி)

3) 1987 இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 13ம் திருத்தசட்டம் மற்றும் 1987 42 பாராளுமன்ற சட்டத்துக்கமைய மாகாணசபை முறை கொண்டுவரப்பட்டது. அறிமுகம்.

(01 புள்ளி)

அறிமுகம்

யாப்பின் 154 (.2) ஆம் சரத்தின் படி மாகாண சபையின் பிரதான நிறைவேற்றாளரான ஆளுனரை ஜனாதிபதியே நியமிக்கின்றார்.

- ஆளுனர் ஜனாதிபதியின் பிரதிநிதியாக செயற்படுவர்.
- ஆளுனர் மத்திய அரசுக்கும் மாகாணங்களும் தொடர்பை ஏற்படுத்தல். (08 புள்ளி)
- மாகாணசபையின் நிர்வாகம் வீழ்ச்சியடைந்தால் அவ் மாகாணசபையை தனது தலையீட்டுக்கு கொண்டு வரும் அதிகாரத்தை மத்தியரசு பெறுகிறது. மாகாணசபைக்குரிய நிதியை முழுமையாக மாகாணசபையிடம் இல்லாததால் மத்திய அரசின் ஒதுக்கீட்டினதும் தங்கியிருக்கும் நிலை.
- இவைகளின் அடிப்படையில் மத்திய மாகாணசபைகளுடைய தொடர்பினை அறிய முடிகிறது. (01 புள்ளி)

4) 156(1) அத்தியாயத்தின்படி தேசிய பெறுகை ஆணைக்குழு பெறுகை கணக்கியல், சட்டம் 02 பொது நிர்வாகம் ஆகிய துறைகளில் எண்ணிடப்பட்ட அனுபவத்தை உடைய ஆட்களில் இருந்து அரசியலமைப்பு பேரவையில் 3 உறுப்பினருக்கு குறையாதவர்களின் விதப்புரைக்கமைய 5 உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர் இதில் ஒரு தலிசாளர் இடம்பெறுவர், 03 வருட பதவிக்காலம், சம்பளம் திரட்டு நிதியிலிருந்து வழங்கப்படும். (08 புள்ளி)

- இவற்றின் பணிகளாக எல்லா அரச நிறுவனங்களினதும் பண்டங்கள் மற்றும் சேவைகள், வேலைகள், ஆலோசனை வேலைகள் மற்றும் தகவல் முறைமைகள் என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கான நியாயமான, ஒப்பரவான, வெளிபடையான பேட்டியாளர் மற்றும் செலவுத்திறனான நடவடிக்கை முறைகளையும் வழிகாட்டி நெறிகளையும், அவ்வழிகாட்டி நெறிகளை வர்த்தக மாணியின் வெளியிட செய்வித்தலும் அத்தகைய வெளியீட்டிலிருந்து 03 மாதங்களுக்குள், அங்கிகாரத்துக்காக பாராளுமன்றத்தில் முன்வைத்தலும் இதன் பணியாகும்.
- துணைக்குழுவின் உறுப்பினரால் செய்யப்பட்ட காரியத்துக்கு எதிராக வழக்கு தொடர முடியாது. ஆணைக்குழு செயற்பாட்டுக்கு நிதி திரட்டு நிதியிலிருந்து பெறப்படும் என்றவாறு விடை அமைதல் எதிர்பார்க்கப்படுகிறது. (01 புள்ளி)

8. 1) பிரித்தானிய காலணித்துவத்திலிருந்து விடுபட்ட பின்னர் தொடர்ந்து உறவை பேணும் நோக்கத்தோடு 1944 உருவாக்கியது. அறிமுகம் (01 புள்ளி)

**இதன் நோக்கங்களாக**

- பொருளாதார அரசியல், கலாச்சார துறைகளில் அந்நியயோன்ய ஒத்துழைப்பை வளர்த்தல்.
- தொழிநுட்ப அறிவை பகிர்ந்து கொள்ளல்
- புலமை பரிசில்களை பகிர்ந்து கொள்ளல்
- அங்கத்துவ நாடுகளுக்கிடையே தொடர்புகளை வளர்த்தல்
- பிரித்தானிய காலணித்துவத்திலிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் அங்கத்துவம் பெற முடியும். அவ்வாறு எல்லா நாடும் பெற வேண்டும் என்று இல்லாது இன்று 52 நாடுகள் அங்கம் வகிக்கின்றது. (08 புள்ளிகள்)

- இங்கு மூன்று நிறுவனங்கள் காணப்படுகிறது. அதன் விளக்கம்.
- அதன் செயற்பாடுகள் பற்றிய மதிப்பீடு
- மோதல் தீத்தல், பயங்கரவாதத்திற்கு எதிராக செயற்படல். (01 புள்ளி)

2) மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும், சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கோடு 2ம் உலகமகா யுத்தத்தின் பின்னர் பிரித்தானிய பிரதமர் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ரஷ்சிய தலைவர் முயற்சியால் 1945 04.25 திகதியிலிருந்து 26.06 வரை பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற மகாநாட்டில் புலம் உருவாகியது. (01 புள்ளி)

- இது 3ம் யுத்தம் நடைபெறாது தடுத்தல்.
- அடிப்படை மனித உரிமை பாதுகாக்கும் மனித நேயற்ற கௌரவிக்கும் சமுதாயமொன்றை உருவாக்குதல்.
- சர்வதேச சமாதானம் பாதுகாப்பு ஆகியவை உறுதிப்படுத்துவதற்காக எல்லா சக்திகளையும் அதிகாரங்களையும் ஒன்றிணைத்தல் பொது நன்மை கருதியல்லாது வேறு காரணங்களுக்காக ஆயுதப்பலத்தை பயன்படுத்தும் கொள்கையை நிராகரித்தல்.
- இதன்படி ஐக்கிய நாடுகள் சபையை நிறுவுதற் நோக்கம் சர்வதேச சமாதானத்தை பேணுவதாகும்.

- இதனடிப்படையில் உலகம் பூராகவும் சமாதானத்தைப் பேணல்.
- இனங்களுக்கிடையே நட்புறவை பேணல்.
- ஏழ்மையில் வாடும் மக்களின் வாழ்க்கையை நிலையை மேம்படுத்தல் போன்ற குறிக்கோள்கள் உருவாக்கப்பட்டது.

UNO ஆறு உட்கட்ட அமைப்புகள் காணப்படுகிறது. இவற்றின் பொதுசபை 193 நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றார்.

- பாதுகாப்புச்சபை 15 உறுப்பினர்களைக் கொண்டு உள்ளது.
- சர்வதேச நெருக்கடி நிலையில் இருக்கும் எந்த ஒரு நெருக்கடிகளையும் பரிசீலனை செய்தல்.
- ஆயுத கட்டுப்பாடு தொடர்பான பொருத்தமான வழிமுறையை திட்டமிடல்.
- அங்கிகரிப்பு செயற்பாடுகளுக்கிடையிலான தடை
- ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக இராணுவப்பலத்தை உபயோகித்தல்.
- சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடல். *(08 புள்ளிகள்)*

இன்றைய நிலையில் UNO வின் செயற்பாடு தற்கால நடைமுறைகளுடன் பலம் பலவீனங்களை மதிப்பிடல் எதிர்பாக்கப்படுகிறது. சமாதானத்துக்காக ஒன்றுபடுவோம். என்ற தீர்மானத்து சபை நடவடிக்கை எடுத்தல். *(01 புள்ளி)*

3) 1985 டிசம்பர் 8 திகதி தெற்காசிய 7 நாடுகள் இணைந்து உருவாக்கப்பட்டது. ஆப்காணிஸ்தான் 8 வது உறுப்பு அரசாக இணைந்து கொண்டது. தெற்காசிய நாடுகளிக்கிடையில் உருவாகிய ஒத்துழைப்பின் காரணமாக பிராந்தியத்தின் சமூக, பொருளாதார கலாசார மேம்பாடு அடைய உருவாகியது. அறிமுகம். *(01 புள்ளி)*

- சார்க அமைப்பின் மூலக் கொள்கைகள் எதிர்பார்க்கப்படுகிறது.

**சார்க் அமைப்பின் நோக்கங்கள்.**

- தமர் பிராந்திய பொதுநலன் பாதுகாப்பை மேம்படுத்தல்
- சகலரும் கௌரவமாக வாழ்வதற்கு வாய்ப்பளித்தலும் அவர்களின் திறனை விருத்தி செய்தலும்.
- தெற்காசிய அரசுகளுக்கு மத்தியில் கூட்டுத்தன்னம்பிக்கையை பலப்படுத்தலும் மேம்படுத்தலும்.
- பொருளாதார சமூக கலாசார தொழினுட்ப துறையில் பரஸ்பரம் ஆதரவு வழங்கல்.
- ஏனைய அபிவிருத்தி அடைந்த நாடுகளுடனான ஒத்துழைப்பை பலப்படுத்தல்.

போன்ற பல்வேறு நோக்கங்கள் கொண்டு செயற்படும் பிராந்திய அமைப்பு. *(08 புள்ளிகள்)*

அதன் நோக்கத்தை அக்கூற்று கொள்வதில் பல சவால்களை இன்று எதிர்கொள்கின்றது, பொருளாதாரம், பயங்கரவாதம், வறட்சி, வறுமை என்பன இப்பிராந்திய அமைப்புக்கு சவாலான விடயம் என்றவாறு தற்கால உதாரணங்களுடன் விளக்கம் அளித்தல். எதிர்பார்க்கப்படுகிறது.

முடிவுரை (01 புள்ளி)

4) ஐ.நா.சபையின் பிரதான நீதி நிறுவனம் இது நெதர்லாந்தில் உள்ள கேக் நகரில் அமைந்து. பொது சபையின் அனுமதியுடன் உறுப்பினர் தெரிவு இடம் பெறும். இது ஒரு சுதந்திர நிறுவனமாக செயற்படல். (01 புள்ளி)

அமைவு சேர்கள 15 உறுப்பினர் விளக்கம் எதிர்பார்க்கப்படுகிறது.
அதிகாரம் பணிகள் விளக்கம் (08 புள்ளிகள்)

முடிவுரை சர்வதேச நீதி அதிகாரம் பொருந்திய சுயாதீன நிறுவனம் அசுகளுடையே ஏற்படும் பிரச்சனையை தீர்க்கும் வழிமுறை மேற்கொள்கிறது. (01 புள்ளி)

**புள்ளித்திட்டம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 4 | 11. 3 | 21. 1 | 31. 4 | 41. 3 |
| 02. 2 | 12. 3 | 22. 4 | 32. 3 | 42. 1 |
| 03. 3 | 13. 4 | 23. 3 | 33. 1 | 43. 1 |
| 04. 1 | 14. 1 | 24. 5 | 34. 5 | 44. 5 |
| 05. 3 | 15. 2 | 25. 1 | 35. 5 | 45. 4 |
| 06. 5 | 16. 1 | 26. 4 | 36. 4 | 46. 4 |
| 07. 5 | 17. 5 | 27. 1 | 37. 1 | 47. 5 |
| 08. 4 | 18. 1 | 28. 3 | 38. 5 | 48. 3 |
| 09. 1 | 19. 4 | 29. 4 | 39. 3 | 49. 5 |
| 10. 2 | 20. 1 | 30. 3 | 40. 1 | 50. 1 |

The National e-learning Portal for The General Education